**தலைப்பு 124 – சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டிய மரபுரிமைகள் அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டிய மரபுரிமைகள் அமைச்சின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டிய மரபுரிமைகள் அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2019 யூன் 06 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டதுடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 31 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டிய மரபுரிமைகள் அமைச்சின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்தம் மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய

வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்பட வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உபபிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிவருவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டிய மரபுரிமைகள் அமைச்சால் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறமுடியாதுள்ளதுடன் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகளும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஒரு மூலதன செலவின விடயம் மற்றும் 10 மீண்டெழும் செலவின விடயத்திற்குரிய ரூபா 15,424,225 கூட்டுமொத்தமான பொறுப்புக்கள், பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்குரிய பொறுப்புக்கள் கணக்குகளிற்கு கொண்டுவரப்பட வேண்டும். | கணக்காய்வின் போது 2018 ஆம் ஆண்டிற்கான பொறுப்புக்களை பதிவு செய்வதற்கு பதிவேடொன்று பேணப்பட்டிருக்காததுடன் இந்த ஆண்டிலிருந்து பொறுப்புக்கள் பதிவேடொன்றை பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

### 1.6.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பமொன்று கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றது.

**கணக்காய்வு அவதானிப்பு**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 104, 105 மற்றும் 110 | 2016 ஆம் ஆண்டில் விபத்துக்குள்ளாகி சேதமடைந்த வாகனத்தை திருத்தும் நடவடிக்கைகளிற்காக ரூபா 10,713,494 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டில் காப்புறுதி இழப்பீடாக ரூபா 8,557,877 தொகை | நிதிப் பிரமாணங்களுடன் இணங்குதல் வேண்டும். | 2016 ஆம் ஆண்டில் இடம்பெற்ற விபத்தினால் ஏற்பட்ட சீஏஎல் - 0485 இலக்கமுடைய சேதமடைந்த வாகன திருத்தத்தின் போது சேதமானது ஒதுக்கீட்டுக் கணக்கிற்குரிய நட்டங்கள் மற்றும் சேதங்கள் முற்பணக் கூற்றில் |

| | | |
|---|---|---|
| | பெறப்பட்டிருந்தது. இவ் விபத்தின் விபரங்கள் நட்டங்கள் மற்றும் சேதங்கள் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றில் நட்டங்கள் மற்றும் சேதங்களின் கீழ் இந் நட்டம் அறிக்கையிடப்பட்டிருக்காதால் பூர்வாங்க மற்றும் இறுதி விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அமைச்சிற்கு நட்டமொன்றாக ஏற்பட்ட ரூபா 2,155,617 தொகையான செலவினத்திற்கு காரணமான பொறுப்பான தரப்பினர்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | பதியப்பட்டிருக்கவில்லை. ஆகையால் இறுதிக் கணக்கின் நட்டங்கள் மற்றும் சேதங்கள் முற்பணக் கூற்றில் அத்தகைய நட்டத்தை பதிவு செய்வதற்கு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக 02 மாதிரிக் கிராமங்களை இனங்காண்பதை தொடர்ந்து சமுதாயங்களின் பிரச்சனைகளை இனங்காண்பதற்கும் குறைந்த வருமானமுடைய குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கும் ஆராய்ச்சியொன்றை மேற்கொள்வதற்கு பிலிமதலவ கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவகத்தால் ரூபா 250,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அவ் ஆராய்ச்சி அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | பொருத்தமானவாறு பட்டியலிடப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பட்டியலிடப்பட்ட திட்டங்கள் அரசாங்கத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக மாற்றமடைந்திருந்தன. இறுதியில் முன்னைய ஆண்டிலிருந்து அமுல்ப்படுத்தப்பட்ட ஏற்கனவேயுள்ள 02 மாதிரிக் கிராமங்கள் மாத்திரம் 2018.09.03 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஆகையால் இரண்டு மாதிரிக் கிராமங்கள் தொடர்பான முன்மொழிவுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

**2.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஆண்டினுள் சமூகப் பிரச்சனைகள் தொடர்பான ஆராய்ச்சி செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு ரூபா 5,000,000 நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 2,183,000 செலவிட்டு செயற்திட்ட முன்மொழிவினை தயாரித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பட்டியலிடப்பட்ட காலப்பகுதியினுள் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இதற்காக ரூபா 5 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. களத்தில் உள்ள மதியுரை நிபுணரொருவரின் வழிகாட்டலின் கீழ் உரிய நிறுவனங்களில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களால் அவர்களாலேயே இவ் ஆராய்ச்சி செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு பொருத்தமாக இருக்கும் என தீர்மானிக்கப்பட்ட காரணத்திற்காக இவ் ஏற்பாடு தொடர்பான விடயம், ஆராய்ச்சியை அமுல்ப்படுத்தும் பொறுப்பு இவ் உத்தியோகத்தர்களிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. 2018 மே மாதத்தில் அமைச்சின் விடய நோக்கெல்லை மாற்றப்பட்டிருந்ததால் 03 ஆராய்ச்சிகள் மாத்திரம் அமுல்ப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னேற்றும் நோக்கத்தில் பொறளை மற்றும் பிலிமதலவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவகம் அயையாண்டு தோறும் ''தரணய'' செய்திமடலை வழங்குவதற்கு திட்டமிட்டிருந்தது. பின்னர் முதலாவது தொகுதிக்காக ரூபா 50,000 நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 06 மாதங்களாக முதலாவது தொகுதியை அச்சிடுவதற்கு தாமதம் ஏற்பட்டிருந்ததுடன் இறுதிக் காலாண்டில் அவை அச்சிடப்பட்டிருந்தன. ஆகையால் இரண்டாவது தொகுதி அச்சிடப்பட்டிருக்கவில்லை. | வருடாந்தம் தயாரிக்கப்படுகின்ற திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த திட்டம் ஏப்பாலில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மேலும் வருடாந்த திட்டம் ஆகஸ்ட் மற்றும் செப்தெம்பர் மாதங்களில் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக நிறுவகம் தொடர்பான அபிவிருத்தி நடவடிக்கைகள் பட்டியலிடப்பட்டவாறு மேற்கொள்வதற்கு தாமதமாகியிருந்தன. அரையாண்டு தோறும் வெளியிடப்பட வேண்டியதன் காரணமாக ''தரணய'' செய்திமடலின் முதலாவது தொகுதி மாத்திரம் இறுதிக் காலாண்டில் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. |

**2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சிற்கு சொந்தமான 12 வாகனங்கள் ஒடும் நிலையில் காணப்படவில்லை. அவ் வாகனங்களில் ரூபா 16,600,000 கிரயமான 4 வாகனங்கள் காணப்பட்டதுடன் ஒரு வாகனம் 10 ஆண்டு தொடக்கம் 05 ஆண்டுகள் வரை செயற்பாடற்று அமைச்சு வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்தது. மிகுதி 07 வாகனங்கள் ஏறத்தாழ ஒரு வருடமாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் பொறளை கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவகத்திற்குச் சொந்தமான 02 வாகனங்கள் நோக்கமெதுவும் இன்றி அந் நிறுவக வளாகத்தில் நிறுத்தப்பட்டிருந்தன. | வாகன திருத்தங்கள் உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். அல்லது அவ்வாறு செய்யாவிட்டால் அத்தகைய வாகனங்கள் அகற்றப்பட வேண்டும். | வாகனத்தை திருத்துவதற்கான செயன்முறையில் நடவடிக்கைகள் காணப்படுகின்றன. |
| (ஆ) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் ரூபா 3,385,762 பெறுமதியான உபகரணங்கள் பொறளை கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவகத்தின் தங்கும் விடுதி மற்றும் சாப்பாட்டறைக்கு கொண்டுவரப்பட்டிருந்தன. அவ் மின் உபகரணத்தின் உத்தரவாதக் காலப்பகுதி ஆகக் குறைந்தது ஒரு நாளேனும் அத்தகைய உபகரணத்தை பயன்படுத்தாமல் காலாவதியாகியிருந்தது. ஏனெனில் இவ் உபகரணங்கள் 2019 யூன் 07 வரை குறைப்பயன்பாட்டில் காணப்பட்டன. | தேவைப்பாடுகளின் பிரகாரம் கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் பொருத்தமானவாறு விநியோகங்கள் மேற்கொள்ளப்பட வேண:டும். | தங்கும் விடுதியின் திருத்த நடவடிக்கைகள் காரணமாக தாமதமாகியிருந்ததால் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் களஞ்சியத்தில் வைக்கப்பட வேண்டியிருந்தன. |
| (இ) | தங்கும் விடுதியில் 30 உத்தியோகத்தர்களிற்கான போதுமான இடம் காணப்பட்ட போதிலும் தங்கும் விடுதி திருத்தம் செய்யப்பட்டிருக்காததன் காரணமாக இங்கே தங்கும் விடுதிகளில் குடியிருப்பு வசதிகளை உத்தியோகத்தர்கள் பெற முடியாதிருந்த நிலைமையொன்று | திருத்த நடவடிக்கைகள் பட்டியலிடப்பட்ட காலப்பகுதியினுள் மேற்கொள்ளப்பட வேண்டும். | தங்கும் விடுதியின் திருத்த நடவடிக்கைகள் தாமதமடைந்திருந்தன. |

காணப்படுகின்றது. மீளாய்வாண்டில் ஒக்தோபர் மாதத்தில் திம்பிரிஹஸ்யய பிரதேச செயலாளரிற்கு ரூபா 6,789,461 தொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் 2019 யூன் 7 வரையிலும் திருத்த நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது 70 வயதுக்கு மேற்பட்ட குறைந்த வருமானமுடைய முதியோரிற்கு ஒவ்வொன்றும் ரூபா 2,000 வீதம் மாதாந்த படியை வழங்குவதற்காக 416,667 முதியோர்களிற்காக ரூபா 9,816.50 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 410,397 பயனாளிகளிற்கு ரூபா 9,590.0 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது. படியை வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட அனைத்து முதியோர்களிற்கும் முதியோர் படி வழங்கப்பட்டிருக்கவில்லை. | உரித்துள்ள ஆகக்கூடிய எண்ணிக்கையான முதியோர்களிற்கு படியை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் பெறப்பட்ட நிதியேற்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு படி செலுத்தப்பட வேண்டிய பயனாளிகளின் எண்ணிக்கை 416,667 ஆக காணப்பட்டது. பின்னர் அத்தகைய பயனாளிகளின் மொத்த எண்ணிக்கைக்கு நிதியேற்பாடு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் பயனாளிகள் இறத்தல், வதிவிடத்ததை மாற்றுதல், நோய் அல்லது வேறு காரணங்களினால் படியை சிலர் பெற்றிருக்கவில்லை. இவ் விடயங்களை நிச்சயமாக இனங்காணாமல் காத்திருப்பு பட்டியலிலிருந்து முதியோர்களை அகற்ற முடியாதுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது ஒவ்வொன்றும் ரூபா 5,000 வீதம் மாதாந்த படியை வழங்குவதற்காக 11 மாவட்டங்களிலுள்ள 21,500 கிட்னி நோயாளர்களிற்காக ரூபா 1,322.9 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விட 1,838 அதிகமான நோயாளிகளை உள்ளடக்கி 23,338 நோயாளிகளிற்கு செலுத்துவதற்காக பணம் | நிதியேற்பாடுகளை ஆகக்கூடியளவு பயன்படுத்துவதன் ஊடாக நோயாளிகளிற்கு உதவியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கிட்னி நோயாளர்களின் இறப்பு மற்றும் மிகவும் துரிதமாக ஏற்படுகின்ற அத்தகைய நோயாளர்களின் புதிய ஆட்சேர்த்தல்கள் போன்ற காரணங்களிற்காக மிகுதியாகவுள்ள சிறிய தொகைப் பணத்தை தடுப்பது நடைமுறையில் சிக்கலானதாக உள்ளது. எனினும் இப் பிரச்சனைகளை குறைப்பதற்கும் எதிர்காலத்தில் அதிகமான கிட்னி நோயாளர்களிற்கு உதவி வழங்கப்படுவதற்கும் |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கப்பட்டிருந்தது. ரூபா 5,064 மில்லியன் தொகை மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு காணப்பட்டது. மேலும் கிட்னி நோயாளர்களின் காத்திருப்பு பட்டியல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | ஆகக்கூடியளவு முயற்சி எடுக்கப்படும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது 25 மாவட்டங்களிலுள்ள 34,667 ஊனமுற்றவாகளிற்கு ஒவ்வொன்றும் ரூபா 3,000 மாதாந்த ஊனமுற்ற படியாக செலுத்தப்படுவதற்கு ரூபா 1,151.76 மில்லியன் தொகை பெறப்பட்டிரந்த போதிலம் ஊனமுற்ற நபர்களிற்கு ரூபா 31,956 தொகையான படிகள் வழங்கப்பட்டிரந்ததுடன் ரூபா 10.5 மில்லியன் மிகுதி தொகை காணப்பட்டது. மேலும் காத்திருப்பு பட்டியல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதியேற்பாடுகளை ஆகக்கூடியளவு பயன்படுத்துவதன் ஊடாக ஊனமுற்ற நபர்களிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்விலிருந்து குறிப்பிடப்பட்ட விடயங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதுடன் மூன்று மாதங்களிலிருந்து மூன்று மாதங்களிற்கு (காலாண்டு அடிப்படையில்) பயனாளிகளிற்கான மாவட்ட செயலகங்களிற்கு இந்த அலுவலகத்திலிருந்து நிதியேற்பாடு விடுவிக்கப்படுகின்றது. |
| (ஈ) | அமைச்சிற்கு சொந்தமான 03 வாகனங்கள் நிறுவகத்தில் காணப்பட்ட போதிலும் அவ் வாகனங்கள் 01 ஆண்டு தொடக்கம் 03 ஆண்டுகள் வரை திருத்தத்திற்காக கொண்டுவரப்பட்டிருந்ததுடன் அவ் வாகனங்கள் திருத்தப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு பலப்படுத்தப்பட வேண்டும். | அமைச்சு மற்றும் அமைச்சின் அதிகார எல்லையின் கீழ் காணப்படுகின்ற அனைத்து நிறுவகங்களிலும் உள்ள குறைப்பயன்பாட்டு வாகனங்களை இனங்காண்பதற்கும் 2019 ஆகஸ்ட் மாதத்தினுள் அத்தகைய வாகனங்களை அகற்றுவதற்கும் திணைககளத் தலைவர்களிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தது. |

**3. மனித வள முகாமைத்துவம்**

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பொறளை கிராமிய அபிவிருத்தி பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவகத்திலுள்ள பணிப்பாளர் பதவி 2018 ஆகஸ்ட் தொடக்கம் வெற்றிடமாகவுள்ளது. மேலும் அதே நிறுவகத்தில் 02 | நிறுவகத்தின் தொழிற்பாடுகளை பேணுவதற்கு நிரந்தரப் பணிப்பாளர் நியமனம் செய்யப்பட வேண்டும். | இலங்கை நிர்வாக சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக பணிப்பாளர் பதவி நிரப்பப்பட முடியாதிருந்தது. |

பிரதிப்பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் பதவிகள் நீண்ட காலமாக வெற்றிடமாக் காணப்பட்டதுடன் ஒரு பிரதிப் பணிப்பாளர் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு வெளியே சேவையில் ஈடுபட்டிருந்தார். ஆகையால் நிறுவகத்தின் தொழிற்பாடுகளை ஆற்றுவது சிக்கலானதாக காணப்பட்டது.